தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.அ.ஜஸ்டின்,பி.எஸ்சி(விவ)

செ.மு.ஆ.எண்.அ2/9677/2012. நாள்: 07.07.2020

| | |
|---|---|
| பொருள் | பொதுப்பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.ப.அறிவுக்கரசன், இளநிலை உதவியாளர் (பி) /கிடங்கு மேலாளர் (தரம்-3) வேளாண்மை விரிவாக்க மையம், மேலத்திருப்பந்துருத்தி - கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது–பணி வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக. |
| பார்வை | 1. அரசாணை (3டி) எண். 89, வேளாண்மை (வேநி9) துறை நாள் 13.03.2020.<br>2. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.அநிபி3/27388/19 நாள் 10.06.2020. |

ஆணை:-

பார்வையில் கண்ட அரசாணையின்படி, திரு.ப.அறிவுக்கரசன், இளநிலை உதவியாளர் (பி)/கிடங்கு மேலாளர் (தரம்-3) வேளாண்மை விரிவாக்க மையம், மேலத்திருப்பந்துருத்தி அவர்களது பணியினை இளநிலை உதவியாளர் (பி)/கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் இவர் முதன்முதலில் பணியேற்ற நாளான 28.09.2018 மு.ப. முதல் பணிவரன்முறை செய்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்தை தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-அ.ஜஸ்டின்,
வேளாண்மை இணை இயக்குநர்
தஞ்சாவூர்.

இணைப்பு - பார்வை 1-இல் கண்ட
அரசாணை.

பெறுநர்: திரு.ப.அறிவுக்கரசன், இளநிலை உதவியாளர் (பி) கிடங்கு மேலாளர் (தரம்-3) வேளாண்மை விரிவாக்க மையம், மேலத்திருப்பந்துருத்தி. (அரசாணை நகலுடன்)

வழி மற்றும் நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், திருவையாறு.

நகல் - பணிப்பதிவேடு/இருப்புக் கோப்பு. (அரசாணை நகலுடன்)

//ஆணைப்படி//

13/7
கண்காணிப்பாளர்.

எம்.தே.

13/7/2020

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேளாண்மைத்துறை – திரு P. அறிவுக்கரசன் கிடங்கு மேலாளர் (தரம்–3) – கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – 28.09.2018 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வேளாண்மை (வே.நி9) துறை

அரசாணை (3டி) எண் 89 நாள்: 13.03.2020

விகாரி வருடம்,
மாசி திங்கள் 30
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண் 100, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.

2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அ.நி.பி3 / 27388 / 2019, நாள் 05.07.2019.

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில் திருவோணம், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து 24.01.2010 அன்று பணிக்காலத்தில் காலமான திரு. ஜி. எம். பன்னீர்செல்வம் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு/மகன் திரு. P. அறிவுக்கரசன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களைப் பரிசீலித்து, கருணை அடிப்படையில் கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்து வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அ.நி.பி6 / 41286 / 2018, நாள் 26.09.2018–ன்படி தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்து, தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அ2/9677/2012, நாள் 28.09.2018ல் வழங்கப்பட்ட ஆணைப்படி 28.09.2018 முற்பகல் திருவையாறு வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் மேலதிருப்பந்துருத்தி வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆக தனியர் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், அன்னாரின் பணியினை 28.09.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு கருணை அடிப்படையில் தற்காலிகமாக கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. P. அறிவுக்கரசன் என்பவரது பணியினை 28.09.2018 முற்பகல் முதல், அவர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், கிடங்கு மேலாளர் (தரம்–3) ஆகப் பணிநியமனம் செய்யப்பட்ட அன்னாரின் பணி 28.09.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடைவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறையின் அ. சா. எண் 18077 / க்யூ1 / 2019–1, நாள் 25.11.2019 மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்துறையின் அ. சா. எண் 39486/ஜி2/2019–1, நாள் 05.12.2019–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5 (இ).
திரு. P. அறிவுக்கரசன், கிடங்கு மேலாளர் (தரம்–3)
வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5.
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்புடையது)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல்
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு எண் 16856 / வேநி9 / 2019
இருப்புக்கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

வ. சசிகுமார் 13/3/2020
பிரிவு அலுவலர்
13/3/2020